**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ஆம் நாள்,**
**CC 152 /2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 17.04.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. குமரேசன் | வயது | : | 57 |
| த.பெ | : | திரு. மஞ்சினி | நிலை | : | **PW-9 (LW-3)** |

**A2,A3 are present. A1,A4 are called absent. Defence counsel filed petition u/s.317 of Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதன்மை விசாரணை-**

நான் தற்போது பாண்டிச்சேரி வாண்ராபேட்டையில் வசிக்கிறேன். லேப் டெக்னிஷனாக வேலை செய்கிறேன். அ.சா.1 எனது மைத்துனர், அ.சா.2 அவரது மனைவி, சாட்சி விஜயலட்சுமி எனது மனைவி. அவர் தற்போது மூட்டுவலி அறுவை சிகிச்சை செய்யஉள்ளதால் நீதிமன்றத்திற்கு வரஇயலவில்லை. ஆஜர் எதிரிகளை தெரியவில்லை. சம்பவத்தின்போது நான் எதிரிகளை பார்க்கவில்லை. கடந்த 2011-ஆம் வருடம் பாண்டிச்சேரியிலிருந்து சிதம்பரம் கோயிலுக்கு நானும் எனது மனைவியும் அ.சா.1,2 தனித்தனி இருசக்கர வாகனங்களில் சிதம்பரம் கோயிலுக்கு சென்றபோது வரும்வழியில் ஒருகோயிலில் திருவிழா நடந்ததால் கூட்டமாக இருந்தது நானும் எனது மனைவியும் செல்வதற்கு சற்று நேரமாகிவிட்டது. எங்களுக்கு முன்னால் அ.சா.1,2 அவர்கள் வாகனத்தில் முன்னே சென்றனர். ஆலப்பாக்கம் மீன் குட்டை அருகே ரோட்டில், எங்களுக்கு முன்னால் சென்ற அ.சா.1,2ம் கீழேவிழுந்து கிடந்தார்கள் என்னவென்று கேட்டபோது 3 நபர்கள் ஒரு இரு சக்கர வாகனத்தில் வந்து அ.சா.2ன் கழுத்திலிருந்து தாலி செயின் சுமார் 10 பவுனை அறுத்துவிட்டு சென்றதாக கூறினார். அப்போது மணி சுமார் 8.30 – 9 மணி இருக்கும் மேற்படி எதிரிகளின் இருசக்கர வாகனம் அலாய் வீல் போட்டிருந்ததாக சொன்னார். பின்னர் கீழேவிழுந்த காயம்பட்டவர்களை தூக்கி தண்ணீர் கொடுத்து, புதுச்சத்திரம் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றேன். எனது மைத்துனர் விஜயரங்கன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னையும் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

சம்பவத்தின்போது நானும் எனது மனைவியும் பாண்டிச்சேரியிலிருந்து சிதம்பரத்திற்கு என்னுடைய Hero Splender PY 01 R 3762 என்ற வாகனத்தில் சென்றோம். என் வாகனத்தில் வந்தது குறித்து போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். காயம் ஏற்பட்ட மஞ்சுளா எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் புதுச்சத்திரம் அருகிலிருந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்றார். மேற்படி விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். இவ்வழக்கு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் மைத்துனர் (அ.சா.1) என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஓம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**